


2021 இலிருந்து, ஏ. எம். றியாஸ் அகமட் இன் ஏற்பாட்டில், மருதமுனை சைக்கிளிங் கிறீன் கழகம், மிதிவண்டி ஓட்டம் மூலம் ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. இதன்மூலம், இக்கழகம், சமூகம், சுற்றுச்சூழல் போன்ற விடயங்களில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. அந்த வகையில், 2023ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30, 31ஆம் தேதிகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்ட மிதிவண்டி ஓட்டம், காலநிலை காரணமாக 2024ஆம் ஆண்டு தை மாதம் 14, 15ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. இந்த மிதிவண்டி ஓட்டம், கல்முனையில் தொடங்கி ஓட்டமாவடி, நாவலடி, புணானை, கல்லெளை, தம்பாளை, மற்றும் சுங்காவில் ஆகிய இடங்களூடாக பொலநறுவையைச் சென்றடைந்தது. இந்தப் பிரச்சார நிகழ்வில், பல்வேறு சுற்றுச்சூழல் விழிப்புணர்வுச் செயல்பாடுகள், விதைப்பந்து எறிதல், மரக்கன்றுகள் நாட்டுதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. இதற்கு நிதி அனுசரணை செய்யும்படி, மருதமுனை சைக்கிளிங் கிறீன் கழகத்தினர் எம்மை அணுகிய போது அதன் முக்கியத்துவம் கருதி நாம் உடனடியாகச் சம்மதித்தோம்.


















இந்நிகழ்வின் மூலம், இதில் பங்கேற்கும் மக்கள், நாளாந்த வாழ்வில் மிதிவண்டி பாவனையை விரும்புவர்களாகவும், மரம் வளர்ப்பதில் நாட்டம் உள்ளவர்களாகவும், பசுமையையும் சுற்றுச்சூழலையும் நேசிப்பவர்களாகவும், குறிப்பாக காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடும் மனநிலை உள்ளவர்களாகவும் மாறுவார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

